ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2179/15 - 2020 ජූනි මස 10 වැනි බදාදා - 2020.06.10

*2179/15 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், குறித்த சபைக்கு உத்தேச பத்தேகம நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் வெனியரவெல நிலக்கீழ் நீர்த்தொட்டியை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.

**மஹிந்த ராஜபக்ஷ,**
நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்.

நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு,
இலக்கம் 35, "லக்திய மெதுர",
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2020, ஏப்பிறல் 22.
5-2/GL/04.

**அட்டவணை**

*காலி மாவட்டத்தில், பத்தேகம பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 184A, நயாபாமுல கிராம அலுவலர் பிரிவில் நயாபாமுல கிராமத்தில் அமைந்துள்ள மஹகொடகன்த என்றழைக்கப்படுகின்ற காணியிலிருந்து 01 றூட் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.*

*வடக்கு : மஹகொடகன்த வீதி அல்லது விஹார வீதி ;*
*கிழக்கு : இசிபதனாராமயவிற்குச் சொந்தமான தூபியுடனான காணிப்பகுதி ;*
*தெற்கு : இசிபதனாராமயவிற்குச் சொந்தமான இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி ;*
*மேற்கு : தொடர்பாடல் கோபுரம் அமைந்துள்ள காணிப்பகுதி.*

*காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும் : (1) வணக்கத்திற்குரிய பலகொட சிறினிவாச தேரர்,*
*இசிபதனாராம,*
*மஹகொடகன்த,*
*பத்தேகம.*

*06-189*

---

## *1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்*

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கட்டளைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் பிரகாரம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் ஹெம்மாதகம நீர் வழங்கல் திட்டத்தின் நீர் பம்பிக்கும் நிலையத்தை விஸ்தரிப்பதற்கு மேலதிக காணித்துண்டு மற்றும் நீர் உள்வாங்கும் பிரதேசத்திலிருந்து நீர் பம்பிக்கும் நிலையம் வரை உட்பிரவேசிக்கும் பாதை மற்றும் குழாய்களைப் பொருத்துவதற்கும் காணித்துண்டுகள் தேவைப்படுவதனால், இங்கு கீழ் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டுகளின் அசையாச் சொத்தின் உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்.*

*நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு,*
*இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2020, ஏப்பிறல் 22.*
*5-2/KY/01.*

**அட்டவணை**

*மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், கங்க இஹல கோரலே பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 1058, வெடகேதெனிய கிராம அலுவலர் பிரிவில், வெடகேதெனிய கிராமத்தில் அமைந்த சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் அவர்களினால் அளந்து தயாரிக்கப்பட்ட பிரதான வரைபடம் கண்டி, இலக்கம் 47872 இன் பகுதியாகக் குறிப்பிடப்படும் "கபலகாவ" எனும் பெயருடைய காணியில் கீழ்க்காணப்படும் எல்லைகளில் அமைந்த சுமார் 03 ஏக்கர் 03 றூட் 20 பேர்ச்சஸ் அளவிலான காணித்துண்டுகள் நான்கு.*

*காணித்துண்டின் இலக்கம் : 01*
*காணியின் பெயர் : கபலகாவ*
*காணியின் அளவு : 03 ஏக்கர்*

காணியின் எல்லைகள் :

வடக்கு : நீர் பம்பிக்கும் நிலையத்திற்காக எடுத்துக்கொண்ட காணி மற்றும் கால்வாய் ;
கிழக்கு : காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு உரிமை கோரும் காணி ;
தெற்கு : காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு உரிமை கோரும் காணி ;
மேற்கு : காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு உரிமை கோரும் காணி.

காணித்துண்டின் இலக்கம் : 02
காணியின் பெயர் : கபலகாவ
காணியின் அளவு : 01 றூட் 20 பேர்ச்சஸ்

காணியின் எல்லைகள் :

வடக்கு : காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு உரிமை கோரும் காணி ;
கிழக்கு : காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு உரிமை கோரும் காணி ;
தெற்கு : டபிள்யூ. எச். எம். பிலபிட்டிய உரிமை கோரும் காணி ;
மேற்கு : காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு உரிமை கோரும் காணி.

காணித்துண்டின் இலக்கம் : 03
காணியின் பெயர் : கபலகாவ
காணியின் அளவு : 40 பேர்ச்சஸ்

காணியின் எல்லைகள் :

வடக்கு : காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு உரிமை கோரும் காணி ;
கிழக்கு : நீர் மின்சார உற்பத்தி நிலையம் அமைந்திருக்கும் காணி ;
தெற்கு : காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு உரிமை கோரும் காணி ;
மேற்கு : டபிள்யூ. எச். எம். பிலபிட்டிய உரிமை கோரும் காணி.

காணித்துண்டின் இலக்கம் : 04
காணியின் பெயர் : கபலகாவ
காணியின் அளவு : 40 பேர்ச்சஸ்

காணியின் எல்லைகள் :

வடக்கு : டபிள்யூ. எச். எம். பிலபிட்டிய உரிமை கோரும் காணி ;
கிழக்கு : நீர் மின்சார உற்பத்தி நிலையம் அமைந்திருக்கும் காணி ;
தெற்கு : மாஓயா ;
மேற்கு : காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு உரிமை கோரும் காணி.

காணிக்கு உரிமை கோருபவர்களின் பெயர்களும் முகவரிகளும் :

காணித்துண்டு இலக்கம் 01, 02 மற்றும் 04 :

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு,
இலக்கம் 475, கடுவெல வீதி,
கனேஹேன,
பத்தரமுல்லை.

காணித்துண்டு இலக்கம் 03 :

திரு. டபிள்யூ. எச். எம். பிலபிட்டிய,
இல்லவதுர,
கம்பளை.

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், குறித்த சபைக்கு கிரம கடுவன ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் நீர் உட்கொள்ளும் கிணற்றினை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதியொன்றினை சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதிகளின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்.*

*நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு,*
*இலக்கம் 35, “லக்திய மெதுர”,*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2020, ஏப்பிறல் 22.*
*5-2/HB/08.*

**அட்டவணை**

*அம்பாந்தோட்டை மாவட்டத்தில், வலஸ்முல்ல பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 554, பஹல வத்த கிராம அலுவலர் பிரிவில் பஹலவத்த என்றழைக்கப்படுகின்ற கிராமத்தில் அமைந்துள்ள விதானகே வத்த மற்றும் கிரிமடுவேஹேன என்றழைக்கப்படும் காணியிலிருந்து அண்ணளவாக 10 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.*

வடக்கு : வராபிடிய குளம் ;
*கிழக்கு* : வாய்க்கால் வழி ;
தெற்கு : குறித்த காணியின் எஞ்சியுள்ள பகுதி மற்றும் கிரம - ஊருபொக்க வீதி ;
மேற்கு : குறித்த காணியின் எஞ்சியுள்ள பகுதி.

*காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும் :* (1) திரு. ஜயந்த நிசேன்திர விஜேசூரிய,
இலக்கம் 49, கொடுவேகொட,
மாத்தறை.

*06-191*

---

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், குறித்த சபைக்கு உத்தேச பத்தேகம நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் வெநியரவெல நிலக்கீழ் நீர்த்தேக்கத்தை*

*நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதியொன்றினை சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்.

*நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு,*
*இலக்கம் 35, "லக்திய மெதுர",*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2020, ஏப்பிறல் 22.*
*5-2/GL/03.*

**அட்டவணை**

*காலி மாவட்டத்தில், வெலிவிடிய திவிதுர பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 192ஏ, கலஹேன்கன்த கிராம அலுவலர் பிரிவில் கலஹேன்கன்த கிராமத்தில் அமைந்துள்ள கில்கிராப்ட் வத்த அல்லது 27 ஏக்கர் காணியிலிருந்து 01 றூட் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.*

வடக்கு : இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி ;
கிழக்கு : இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி ;
தெற்கு : இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி ;
மேற்கு : கலஹேன்கன்த வீதி வரை செல்லும் உப வீதி.

*காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும் :* திரு. தினுலங்க முதலிகே வீரசிங்ஹ,
இலக்கம் 309/A, பிட்டனிய,
கலஹேன்கன்த,
அம்பேகம.

*06-192*

---

## திருத்தம்

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி பதில் கடமையாற்றும் அமைச்சரினால் இலக்கம் 2134/6 மற்றும் 2019.07.30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் இலக்கம் 08-507 இன் கீழ் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அசையாச் சொத்துரிமை எனப்படுவது வழியுரிமை எனவும் அட்டவணையில் காணியின் விஸ்தீரணம் 2 பேர்ச்சஸ் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதாயினும், அது 15 பேர்ச்சஸ் எனவும் திருத்தியமைக்கப்பட வேண்டுமென இத்தால் அறியத்தருகின்றேன்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்.

*நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு,*
*இலக்கம் 35, "லக்திய மெதுர",*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2020, ஏப்பிறல் 22.*
*5/2/2/1484.*

*06-193*

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.